DCS

செய்தி வெளியீடு
**இலங்கையின்** தேசிய கணக்கு மதிப்பீடுகள்
2022 **நான்காம் காலாண்டு மற்றும்** 2022 **ஆம் ஆண்டு**
**உற்பத்தி அணுகுமுறை**
**அடிப்படை ஆண்டு - 2015**

# தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

இலங்கையின், 2022 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டு **(**ஐப்பசி 1 முதல் மார்கழி 31 வரை) மற்றும் 2022 ஆம் ஆண்டுக்குமான (தை 1 தொடக்கம் மார்கழி 31 வரை) உற்பத்தி அணுகுமுறையால் நடப்பு, நிலையான (2015) விலையில் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியும் (மொ.உ.உ), அது தொடர்பான பொருளாதாரக் குறிகாட்டிகளும் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகின்றது.

2021 ஆம் ஆண்டில், நிலையான விலையில் (2015) பதிவு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி, ரூ. 13,037,934 மில்லியனாக இருந்து 2022 ஆம் ஆண்டில் இது ரூ. 12,017,849 மில்லியனாக வீழ்ச்சியுற்றுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான, ஆண்டுக்கு ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதம் 7.8 சதவீத மறையான வளர்ச்சியென மதிப்பிடப்பட்டுள்ளது

2022 ஆம் ஆண்டில் விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் நடவடிக்கைகள் முறையே 4.6 சதவீதம், 16.0 சதவீதம் மற்றும் 2.0 சதவீதம் வீழ்ச்சியுற்றுள்ளது.

2022 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டிற்கான இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியானது நிலையான விலையில் (2015), 2021 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில், ரூ. 3,331,073 மில்லியனில் இருந்து ரூ. 2,917,721 மில்லியனாக மறையான வளர்ச்சி வீத 12.4 சதவீதமாக பதிவு செய்துள்ளது.

உள்ளே

**நிர்வாக சுருக்கம்- 2**
**பின்னணி- 3**
**விவசாய துறையின் செயற்பாடு- 3**
**கைத்தொழில் துறையின் செயற்பாடு4 -**
**சேவைத் துறையின் செயற்பாடு- 4**

**Source Publication**

http://www.statistics.gov.lk/NationalAccounts/StaticalInformation/GDP2015

## நிர்வாக சுருக்கம்

2022 ஆம் ஆண்டுக்குமான தேசிய கணக்கு மதிப்பீடுகள் பற்றிய அறிக்கையை வெளியிடுகையில், 2021 ஆம் ஆண்டில் பதிவுசெய்துள்ள மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடும்போது, 2022 ஆம் ஆண்டில் 7.8 சதவீத மறையான வளர்ச்சியென மதிப்பிடப்பட்டுள்ளது என்று தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகின்றது.

மேலும், 2022 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது நிலையான விலையில் (2015), ரூ 12,017,849 மில்லியனாகவும், இது 2021 ஆம் ஆண்டில் ரூ . 13,037,934 மில்லியனாகவும் பதிவாகியுள்ளது.

பின்வரும் படம் 2018 முதல் 2022 வரையிலான மெய்யான மொ.உ.உ நிலைகளில் ஏற்படும் மாற்றங்களை பிரதிபலிக்கிறது.

படம் 1
மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி –வருடாந்திர தொடர் 2018-2022




**மூலம்:**
தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

மேலும், 2022 ஆம் ஆண்டின் இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி நடப்பு விலையில் 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ. 17,600,191 மில்லியனில் இருந்து ரூ. 24,147,726 மில்லியனாக அதிகரித்ததுடன், இது 37.2 சதவீத நேர் மாற்றத்தையும் பதிவு செய்கின்றது.

பொருளாதாரத்தின் மூன்று முக்கிய பொருளாதார நடவடிக்கைகள்; 'விவசாயம்', ‘கைத்தொழில்’ மற்றும் 'சேவைகள்' ஆகியவை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நடப்பு விலையில் முறையே 8.7 சதவீதம், 30.3 சதவீதம் மற்றும் 56.1 சதவீதம் பங்களித்துள்ளன, அதே சமயம் 2022 ஆம் ஆண்டில் 'பொருட்கள் மீதான வரிகள் மானியங்கள் நீங்கலாக' என்ற கூறு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.9 சதவீத பங்களிப்பை அளித்துள்ளது.

இந்த ஆண்டில், மூன்று முக்கிய பொருளாதார நடவடிக்கைகளான, விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் நடவடிக்கைகள் முறையே 4.6 சதவீதம், 16.0 சதவீதம் மற்றும் 2.0 சதவீத மறை வளர்ச்சி வீதங்களையே பதிவு செய்தன.

## பின்னணி

2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2021ஆம் ஆண்டு பொருளாதார நடவடிக்கைகளில் கொவிட்-19 தொற்றுநோய் தணிந்ததால் படிப்படியாக மீட்சி காணப்பட்டது, 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து பொருளாதார நெருக்கடி, மற்றும் இளைஞர்கள் மற்றும் சமூக அமைதியின்மை பொருளாதாரத்தின் தொடர்ச்சியான சுருக்கங்களை விளைவிக்கிறது. மேலும் அடிக்கடி ஏற்படும் மின்வெட்டு, விநியோகப் பாதைகளுக்கு இடையூறாக நீடித்த எரிபொருள் தட்டுப்பாடு, மூலப்பொருட்களின் தட்டுப்பாடு , உயரும் உற்பத்தி செலவு, உள்நாட்டு மற்றும் உலகச் சந்தைகளில் விலையேற்றம், விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் ஆகிய மூன்று முக்கிய கூறுகளிலும் பொருளாதார நடவடிக்கைகள் கணிசமாகக் குறைந்தன.

விவசாய உள்ளீடுகள், குறிப்பாக உரம் மற்றும் வேளாண் வேதிப்பொருட்களின் பற்றாக்குறை, உள்ளீடுகளின் விலை அதிகரிப்பு மற்றும் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக 2022 ஆம் ஆண்டில் விவசாயத் துறை ஒரு சுருங்கலைப் பதிவு செய்தது. கைத்தொழில் துறையால் பதிவுசெய்யப்பட்ட குறிப்பிடத்தக்க ஆண்டுக்கு ஆண்டு சுருக்கங்கள், கட்டுமான மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளின் மந்தமான செயல்திறன், மூலப்பொருட்களின் பற்றாக்குறை, அதிக உள்ளீட்டு செலவுகள், எரிபொருள் பற்றாக்குறை மற்றும் மின் தடைகள் ஆகியவற்றால் உந்தப்பட்டது. இதற்கிடையில், விவசாயம் மற்றும் கைத்தொழில் துறை நடவடிக்கைகளில் ஏற்பட்ட சுருக்கத்துடன் 2022 ஆம் ஆண்டில் சேவைத்துறையில் ஒரு சிறிய சுருக்கமே ஏற்பட்டுள்ளது.

மதிப்பாய்வுக்கு உட்பட்ட காலகட்டத்தில், பணவீக்கம் குறிப்பிடத்தக்க விலையில் துரிதப்படுத்தப்பட்டது, உள்நாட்டிலும் உலக அளவிலும் விநியோகப் பக்க இடையூறுகள் காரணமாக வட்டி வீத அதிகரிப்பு உயர் மட்டங்களை எட்டியது. நிர்வாக ரீதியிலான விலை மாற்றங்கள், உள்நாட்டில் உயர் பணவீக்கத்தை பதிவு செய்ய நிர்வாக விலை சரிசெய்தல் ஏற்படுத்தப்பட்டுள்ளது மற்றும் ஒட்டுமொத்தமாக இலங்கையின் பொருளாதாரம் 2022 ஆம் ஆண்டில் மெதுவான செயல்திறனைப் பதிவு செய்துள்ளது.

## விவசாய துறையின் செயற்பாடு

2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட நேர் வளர்ச்சி 0.9 சதவீதத்துடன் ஒப்பிடும் போது, 2022 ஆம் ஆண்டில், விவசாய நடவடிக்கைகள் ஒட்டுமொத்த விவசாயத் துறையில் 4.6 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளன. விவசாயச் செயல்பாடுகளின் சுருக்கம் முக்கியமாக 'தானியங்களின் வளர்ச்சி' ( 21.6 சதவீதம்), 'தேயிலை வளர்ச்சி ' (15.9 சதவீதம்), 'கடல் மீன்பிடித்தல் மற்றும் கடல் மீன் வளர்ப்பு' (15.4 சதவீதம்), 'நெல் வளர்ச்சி' (13.0 சதவீதம்), 'விலங்கு உற்பத்தி' (12.9 சதவீதம்), 'மற்ற பான பயிர்களின் வளர்ச்சி (9.1 சதவீதம்), 'காய்கறிகள் வளர்ச்சி ' (8.4 சதவீதம்) மற்றும் ‘இறப்பர் வளர்ச்சி’ (6.7 சதவீதம்) என்பவற்றால் ஏற்பட்டுள்ளது. இருப்பினும், சில விவசாய பொருளாதார நடவடிக்கைகளான 'காடு வளர்ப்பு மற்றும் மரம் வெட்டுதல்' (16.1 சதவீதம்), 'விவசாயம் துணை நடவடிக்கைகள்' (14.7 சதவீதம்), 'நன்னீர் மீன்பிடித்தல் மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு' (11.9 சதவீதம்), ‘எண்ணெய் சார்ந்த பழங்களின் வளர்ச்சி: தேங்காய் உள்ளடங்கலாக’ (8.6 சதவீதம்) மற்றும் 'தாவரப் பரவல்' (8.3 சதவீதம்) இந்த ஆண்டில் கணிசமான நேர்வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்துள்ளன.

## கைத்தொழில் துறையின் செயற்பாடு

2021 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட 5.7 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில், ஒட்டுமொத்த கைத்தொழில்துறை நடவடிக்கைகள் 16.0 சதவீதம் கணிசமான மறை வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்துள்ளன.

முந்தைய ஆண்டை விட 2022 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த உற்பத்தித் துறை 12.6 சதவீதம் சரிந்துள்ளது. 'புடவை உற்பத்தி, அணியும் ஆடைகள் மற்றும் தோல் தொடர்பான தயாரிப்பு' மட்டுமே இந்த ஆண்டில் 8.1 சதவீதம் விரிவாக்கம் கண்டுள்ளது. முக்கிய உற்பத்தி நடவடிக்கையான, உற்பத்தித் துறையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.1 அதிகபட்ச பங்கைக் கொண்டுள்ள 'உணவு, பானங்கள் மற்றும் புகையிலை பொருட்கள் உற்பத்தி', 14.2 சதவீதம் சரிவை பதிவு செய்துள்ளது. மேலும், மற்ற அனைத்து உற்பத்தி நடவடிக்கைகளும் 2022 ஆம் ஆண்டில் சுருக்கங்களையே பதிவு செய்துள்ளன. இது முக்கியமாக 'இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி' (30.7 சதவீதம்), 'வேறு உலோகம் அல்லாத கனிமப் பொருட்களின் உற்பத்தி' (29.0) சதவீதம்), 'தளபாடங்கள் உற்பத்தி' (26.4 சதவீதம்), 'அடிப்படை உலோகங்கள் மற்றும் புனையப்பட்ட உலோக பொருட்கள் உற்பத்தி' (27.6 சதவீதம்), 'பிற உற்பத்தி மற்றும் பழுது மற்றும் நிறுவல்' (21.7 சதவீதம்) 'இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் உற்பத்தி' (19.0 சதவீதம்) மற்றும் 'இரசாயனப் பொருட்கள் மற்றும் அடிப்படை மருந்து பொருட்கள் உற்பத்தி' (14.0 சதவீதம்). போன்ற சில உற்பத்தி நடவடிக்கைகளால் இயக்கப்படுகிறது.

இருப்பினும், 'கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் உற்பத்தி'யின் செயல்பாடு 2021 ஆம் ஆண்டில் 58.2 சதவீத எதிர்மறை வளர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்துள்ளது.

இதற்கிடையில், 'கைத்தொழில் துறை நடவடிக்கைகளில்', 'கைத்தொழில் துறையின் பங்குகளின் 8.0 சதவீதத்தை ஒத்துள்ள 'கட்டுமான' செயல்பாடு, 2022 ஆம் ஆண்டில், 20.9 சதவீத மறை வளர்ச்சி வீதத்தை பதிவு செய்தது. மேலும், இந்த ஆண்டு 'சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்' செயல்பாடு, 31.0 சதவீத மறை வளர்ச்சி வீதம் பதிவு செய்யப்பட்டது. இதற்கிடையில், 'மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல்' செயல்பாடு' 5.9 சதவீத மறை வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்துள்ளது, அதே நேரத்தில் 'நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல்' செயல்பாடு இந்த ஆண்டில் நேர் வளர்ச்சி வீதத்தில் 0.6 சதவீதத்தைப் பதிவு செய்துள்ளது.

## சேவைத் துறையின் செயற்பாடு

2022 ஆம் ஆண்டில், 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, சேவைத் துறையின் செயல்திறன் 2.0 சதவீதம் குறைந்துள்ளது.

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, மீளாய்வுக்கு உட்பட்ட இக்காலாண்டில், 'நிதி சேவை நடவடிக்கைகள்' மற்றும் காப்புறுதி நடவடிக்கை' முறையே 11.0 சதவீதம் மற்றும் 47.2 சதவீதம் பற்றாக்குறையைப் பதிவு செய்துள்ளன. மேலும், 'வதிவிடச் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள்' (12.1 சதவீதம்) 'நிகழ்ச்சிகள் மற்றும் ஒளிபரப்பு நடவடிக்கைகள் மற்றும் ஆடியோ வீடியோ தயாரிப்புகள்' (11.0 சதவீதம்), 'மனித சுகாதார சேவைகள்' (8.4 சதவீதம்), 'தொழில்சார் சேவைகள்' (4.0 சதவீதம்), 'IT நிரலாக்க ஆலோசனை மற்றும் தொடர்புடைய செயல்பாடுகள்' (2.3 சதவீதம்) மற்றும் 'மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்' (0.2 சதவீதம்) மறையான வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்துள்ளன.

எனினும், சேவைகள் தொடர்பான நடவடிக்கைகள் மத்தியில் , 'தங்குமிடம், உணவு மற்றும் பானங்கள் வழங்கும் நடவடிக்கைகள்' செயல்பாடு'(27.0 சதவீதம்)', 'அஞ்சல் மற்றும் கூரியர் சேவைகள்' (5.7 சதவீதம்), 'பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள்' (3.5 சதவீதம், 'கல்வி சேவைகள்' (3.8 சதவீதம்), 'தொலைத்தொடர்பு சேவைகள்' (3.1 சதவீதம்), 'பொது நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு' (1.2 சதவீதம்) மற்றும் 'பிற தனிப்பட்ட சேவைகள்' (0.4 சதவீதம்) ஆகிய துணை நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டில் நேர்வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்துள்ளன.

**2022 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில் செயல்திறன்**

2022 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டிற்கான தேசிய கணக்கு மதிப்பீடுகள் பற்றிய அறிக்கையை வெளியிடுகையில், 2021 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில் பதிவான நேர் வளர்ச்சியின் 1.4 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டிற்கான GDP வளர்ச்சி வீதம் மறை 12.4 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது என்று தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகின்றது. 2021 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில் நிலையான விலையில் (2015), ரூ 3,331,073 மில்லியனில் இருந்து ரூ. 2,917,721 மில்லியனாக 2022 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டிற்கான இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2022 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டிற்கான இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி நடைமுறை விலையில் 2021 நான்காவது காலாண்டில் ரூ. 4,724,501 மில்லியனில் இருந்து ரூ. 6,575,456 மில்லியனாக அதிகரித்து, நடைமுறை விலை GDP இல் 39.2 சதவீத மாற்றத்தை பதிவு செய்தது. 2022 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில், ஒட்டுமொத்த கைத்தொழில்துறை நடவடிக்கைகள் 30.1 சதவீதம் கணிசமான அளவு சுருக்கம் மற்றும் சேவை நடவடிக்கைகள் 3.9 சதவீதம் மறையான வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்துள்ளன, அதே நேரத்தில் ஒட்டுமொத்த விவசாய நடவடிக்கைகள் 0.7 சதவீதம் சற்று நேர் விரிவாக்கத்தைப் பதிவு செய்துள்ளன.

2022 நான்காம் காலாண்டு மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான தேசிய கணக்குகள் மதிப்பிடலின் மேலும் விரிவான விபரங்கள் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் இணையத்தளத்தில்
http://www.statistics.gov.lk/NationalAccounts/StaticalInformation/GDP2015)வெளியிடப்பட்டுள்ளன .

பி. எம். பி அனுர குமார,
பணிப்பாளர் நாயகம்

**The Vision of DCS**

"To be the leader in the region in producing timely statistical information to achieve the country's development goals."

**The Mission of DCS**

"Making contribution in the socioeconomic development of the country by providing accurate timely statistics, more Effectively by means of new technology, and utilising the services of dedicated staff under a strategic leadership to become a prosperous nation in the globalised environment."

**Department of Census & Statistics,**
**Sankyana Mandiraya**
No. 306/71, **Polduwa Road,Battaramulla**

info@statistics.gov.lk
+94 11 2147000
+94 11 2147011
**statistics.gov.lk**

**This publication is produced by the National Accounts Division**
**3rd floor, Department of Census and Statistics**
National.accounts@statistics.gov.lk
**+94 112147071** **+94 112877938**